கனங்களின் கண் கலக்கம்!

Phone No. 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
[இலங்கை 6 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (14—10—49) வெளியூர் (15—10—49) [இதழ் 65

நிர்வாக நீதி நிலை குலைகிறது!

மந்திரிகளின் மனக்கோட்டை மண்ணைக் கவ்வுகிறது!

பொருந்தாக் குற்றச்சாட்டு! பொருளற்ற சிறை தண்டனை!

பாதுகாப்புக் கைதிகள் நால்வருக்கு நீதிமன்றம் தந்த நல்ல தீர்ப்பு!

12-10-49-ந்தேதி, சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் சத்திய நாராயணராவ் பஷீர் அகமத் சையத் முன்னிலையில், நான்கு பாதுகாப்புக் கைதிகளின் விடுதலை மனுக்கள் ஆராய்ந்து தீர்ப்பளிக்க எடுத்துக் கொள்ளப் பட்டன. அந்தத் தீர்ப்புகளின் முக்கியப் பகுதிகளை மட்டும் இதன் கீழ் குறிப்பிடுகிறோம்.

கிருஷ்ணா ஜில்லாவைச் சேர்ந்த தோழா பி. சத்தியநாராயணாவின் மனுவும், நீதிபதிகள் அளித்தத தீர்ப்பும் :—

"இநத வழககில், பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த மனுதாரர் மீதுள்ள குறறச் சாட்டுகள் எனன வாயிருநதபோதிலும், அவர் விடுதலை செய்யப்படுவதற குரியவரே யாவார், ஏனென்றால், அவரைப பாதுகாப்பில வைப்பதற்காகக காட்டபபட்டுளள காரணங்கள் உறுதியற்றவைகளாகவும், ஆதாரமற்றவைகளாகவும், தெளிவற்றவைகளாகவுமே இருக்கின்றன."

"அரசாஙகததாரால் தேடப்படும் ஒரு போவழியுடன்,-கண்டுபிடிபபோருக்குத் தககப்பரிசளிககபபடும என்று அரசாஙகத்தார விளமபரப் படுத்திததேடும் வரையில. அகப்படாமல் தலை மறைவாகத்திரிந்து கொண்டிருககும ஒரு பேர்வழியுடன — சேர்ந்து கொண்டிருந்தார் என்பதுதான் பாதுகாப்பில் வைககப்பட்டிருநத மனுதாரர்மீதுளள பெருங்குற்றச்சாட்டு. இவாமீதுள்ள மற்றொரு கடுமையான குற்றச்சாட்டு, கொளளை, தீவைததல முதலிய தீச செயலகளாற்றினார் எனபதாகும. ஆனால் இந்தக் குற்றச்சாட்டு சற்றும் பொருததமற்றதாகக காணபபடுகிறது. எந்த இடத்தில் எப்போது இந்தககொள்ளை, தீயிடல பொன்ற செயல்கள், மனுதாரால் நிகழ்த்தப்பட்டன என்று அந்தக் குற்றச்சாட்டில தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே மனுதாரரைப் பாதுகாப்பில் வைத்துவிட்டால இத்தகைய தெளிவற்ற—பொருத்தமற்ற குற்றச்சாட்டை எதிர்த்து, தம கட்சியை எடுததுககூற முடியாமற்போய் விடும. ஆகையால் மனுதாரா விடுதலை செயயப்பட வேண்டியவரே ஆவார்".

*   *   *

மேற்கு கோதாவரியைச்சேர்ந்த பாதுகாப்புக் கைதியாக இருக்கும் தோழர் பி. நரசிம்மமூர்த்தியின் விடுதலை மனுவும், நீதிபதிகளின் தீர்ப்பும்:—

"இளைஞர்களை உடறபயிற்சிகளில் பழக்குவதும், அவர்களைக குறுநதடிகளுடன அணிவகுப்பு நடததுமாறு செயது பயிற்றுவிப்பதும, இது பற்றிய பயிற்சி வகுப்புகள் நடததுவதும மட்டுமே அரசாங்கத்துக்கு விரோதமான, அமைதிககுப்பங்கம விளைககும் நடவடிககை ஆகிவிடாது. இதற்காக வென்று ஒருவரைப் பாதுகாப்புக கைதியாக வைத்திருப்பதெனபது நியாயமாக முடியாது. எனவே, பாதுகாவலில வைப்பதற்குக காட்டபபட்ட காரணங்கள் நியாயமானவைகளாக—பொருத்தமானவைகளாக இலலாதபடியால, மனுதாரா விடுதலை செய்யபபட வேணடியவரே யாவார்."

*   *   *

கிருஷ்ணாவைச் சேர்ந்த பாதுகாபபுக் கைதியாக இருக்கும் தோழர் எம். எல்லையாவின் மனுவும்—தீர்பபும் :—

"மனுதாரர் ஸதல அதிகாரிகளின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்களையோ, ஆயுதந தரித்த விசேஷப் போலீஸ் படையின நடை முறைததிட்டம, நடமாட்டம முதலியவைகளைப பற்றிய தகவலகளையோ தமமுடைய கட்சியைச் சேர்ந்த உறுபபினர்களுக்கு அறிவிததார என்பது ஒன்று மட்டுமே ஆட்சேபகரமான செயலாகி விட மாட்டாது. மனுதாரரைப் பாதுகாவற கைதியாக வைப்பதற்குரிய கட்டளை நியாயமானதென்று எடுததுக்காட்டுவதற்குரிய, பாதுகாவலில் வைபபதறகு இடம தரும் சட்டததின கீழ் வரககூடிய தவறான செயலை மனுதாரர் செய்திருககிறா என்பதை எடுததுக் காட்டுவதற்குரிய இப்போது காட்டப்பட்ட காரணததைப்போலில்லாமல், இன்னும் மிகததெளிவான முறையில காரணம காட்டப்பட்டிருத்தல வேண்டும். அத்தகைய காரணம காட்டப்படாமையால, மனுதாரைக் காவலில வைத்திருப்பது நியாயமல்லவென்று கருதி, விடுதலை செய்கினறோம்."

*   *   *

பாதுகாப்புக் கைதியாக இருக்கும் கிருஷ்ணாவைச்சேர்ந்த தோழா சி இராஜகோபாலாவின் மனுவும் தீர்பபும்:—

"இநத மனுதாரர் மீது காட்டப்பட்டுள்ள குற்றமும், இவரைபபாதுகாவலில் வைததிருபபதற்காகக காட்டப்பட்டுள்ள காரணமும பொருததமாக இலலை. இவரைப் பாதுகாவலில் வைககபபட்டிருநததறகாகக் காட்டபபட்டுள்ள காரணம், அதற்குரிய சட்டவிதிககு இணங்கியதாகவே காணபபடவிலலை. மனுதாரர் 1946 ஆவது ஆண்டில ஜமீனதாரிப் பிரதேசங்களிலிருநத உழவர்களின தொல்லையையும துனபஙகளையும போககி அவர்களை முனனேற்றுவதற்காக உழைதத இயக்கங்களுடன —சிறப்பாக ஜமீன்தாரி மசோதா பற்றிய வேலைகளில — சேர்ந்துகொண்டு தொண்டாற்றிய போது செயத வேலைகளையே அவரைப் பாதுகாபபில் வைபபதற்குரிய காரணமாகக காட்டப்பட்டிருககிறது. இவை நடந்த 1946-ல். இப்படிக் காட்டப்பட்ட காரணங்கள் சட்ட வரம்புககுட்பட்டவைகளாக இல்லை. எனவே, பாதுகாப்பில் மனுதாரரை வைபபதற்காக இடப்பட்ட கட்டளை அடியோடு சட்ட வரம்புக்கு அப்பாறபட்டதாக இருககிறபடியால் மனுதாரர் விடுதலை செய்யபபட வேண டியவரேயாவார்."

*   *   *

காங்கிரஸ் கட்சி எவ்விதத் திட்டமுமின்றி அதிகாரத்தைக் கைப்பற்றி ஆள்கிறது

——(0)——

நேருவின் வசீகரம், பட்டேலின் திறன், காந்தியாரின் ஆவி—இவை காங்கிரசின் முப்பெரும் சாதனங்கள்

——(0)——

சோஷலிச முறையிலான பொருளாதார அமைப்பைக் காங்கிரஸ் கைக்கொள்ளவில்லை

இந்தியா தனது சுதந்தரதின் ஆண்டு விழாவைக் கொண்டாடியது எப்படி? புதிய கண்டிபபான-கடுமைமிக்க நடை முறைகளை வெளியிட்டு. மககள் அவற்றைக் கடைபபிடிக்க வேண்டுமென்று அறிவித்தே சுதந்தரத திருவிழாவைக் கொண்டாடியிருககிறது. இந்தியா இன்னுங் கூட அடிபபடையில பட்டினி நாடாகவேதான் இருந்து வருகிறது. அதிக உணவுப்பொருள்களை விளைவிபபதறகாக வேண்டி அரசாங்கத்தார தீவிர முயறசி எடுததுககொண்டிருக்கின்றனா.

இந்த உணவுப்பெருக்க முயற்சியை விளம்பரப்படுத்திக் காட்டுவதற்காக, புதிய டில்லியிலுள்ள வைசிராய் மாளிகையின் 'கோல்ப்'பந்தாட்ட மைதானத்தைக் கலப்பைகள் உழுது நிலத்தைப புரட்டிவைத்தன. கவர்னர்-ஜெனரல சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி, கோலப பந்தாட்டம் விளையாடத் தெரியாதவராதலின, எருதுகளின் பின்னால் நின்று படம எடுத்துக் கொண்டார.

இந்தியாவின் நகரங்கள் அனைத்தும் வேலையில்லாத் திண்டாட்டத்தில் மூழ்கிக்கிடக்கின்றன. இந்தியத் தொழிற்சாலைகளில் குறைந்த அளவில்தான் எஃகு உற்பத்தி செயயமுடிகிறது; பருத்தித் துணிகளும் குறைவாகவே உற்பத்தி ஆகின்றன; சுதந்தரம் பெறுவதற்கு முன் இந்தியாவில் உற்பத்தி செய்யபபட்டதை விட இபபோது சணலும் மிகக்குறைவாகவே உற்பத்தியாகிறது. ஆனால் விலைகளோ 1939-ஆம் ஆண்டிலிருந்ததை விட இப்போது மும்மடங்கு அதிகமாக உயர்ந்துவிட்டது. கடந்த ஆண்டுஇந்தியா தான் ஏற்றுமதி செய்திருப்பதை விட, அதிகமாக 220 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களை இறக்குமதி செய்திருக்கிறது. இதில் மிகுதிக்காக இந்தியா பெருங்கடனில் மூழ்கியிருக்கிறது. சுதந்தரத் திருநாளை முன்னிட்டு பண்டிட் நேரு விடுத்த செய்தியில், "குணதோஷங்கள் கூறுவதையும், சுயத்திறனாய்வு செய்வதையும் எபபொழுதும் நான் வரவேற்கிறேன். ஆனால், அவை நடைமுறையில் இடம் பெற்றுவிடக் கூடாது. அதாவது செயலாற்றுவதில் அவை இறங்கிவிடக் கூடாது. இந்தியா, தன்மக்கள் அனைவரும் வேலை செய்ய வேண்டும் என இன்று விரும்புகிறது" என்று கூறியுள்ளார்.

ஆனால், இந்தியாவின் மக்களோ, தங்கள் தந்தைக்கொத்த ஆட்சி மன்றமாகி விளங்கும் நேருவின் காங்கிரஸ் கட்சியிலிருந்து தக்க தலைமைப்பதவியையே விரும்புகின்றனா. சுதந்தரம பெறற்கு கருவதென்னும் இந்தியாவின் மன உறுதிக்குரிய இந்தப் பெரிய கருவியாகிய காங்கிரஸானது தன்னுடைய வேலையை—தான் மேற்கொண்ட திட்டத்தை முடித்துவிட்டது. இப்போது, அது கீழ்ததரமான அரசியல் வாதங்களிலும் மாகாண ஊழல்களிலும் தலையிட்டுக் கொண்டிருக்கிறது.

ஆசியாவில் உள்ள மற்ற எந்த நாட்டையும்விட, இந்தியா அதிக ஜனநாயகத்துவமுடைய நாடுதான் என்றாலும், அதில் தக்கமுறையில எதிர்க் கட்சி வேலை செய்யக்கூடியவாறு இன்

[தொடர்ச்சி 4-ம பக்கம் பார்க்க]

நமது காங்கிரஸ் ஆளவந்தார்களின் மனம் உடையும், பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாபபில் வைக்கப்பட்டுள்ள நால்வருக்கு, உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் அளித்துள்ளத் தீர்ப்பைப படித்துப் பார்த்தால்! 'விளக்கமின்மை கூடியவனாயில் எநத அளவிற்கு விளக்கமில்லா

[தொடர்ச்சி 3-ம பக்கம் பார்க்க]

மாலை மணி

சென்னை 14—10—49 வெள்ளிக்கிழமை

"ஆச்சார்ய சுவாமிகளின்" அலறல்!

திருட்டைப் பரம்பரைத் தொழிலாகக் கொண்ட ஒருவனிடம், திருடர்களை அடைத்துவைக்கும் சிறைச்சாலை ஒரு நாட்டிற்குத் தேவையா என்று கேட்டால், அவன் என்ன விடை கூறுவான்? அவனிடம் என்ன விடைதான் எதிர்பார்க்க முடியும்? ஆம், ஆம், அது தேவையானதுதான், என்று பதில் இறுப்பான்? திருட்டுக் கொடுப்பவர்கள் ஏமாறாமல் பார்த்துக்கொள்ளவேண்டியதுதான், அரசாங்கத்தின் அலுவலாக இருக்கவேண்டுமேயல்லாது, திருடர்களுக்காகச் சிறைச்சாலையை நிறுவுவது அவ்வளவு அவசியமில்லாத வொன்றேயாகும் என்று தானே மாற்றம் சொல்வான், திருடன் என்று தன்னை மனதார நம்பி, அப்படியே காட்டிக்கொண்டு வருபவன்!

சிறைச்சாலை தேவைதானா என்று திருடனிடம் ஆலோசனை கேட்பது போன்று, 'காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளிடம்', ஆலோசனை ஒன்று கேட்டுள்ளது இந்திய அரசாங்கம்! அதற்கு அவர் விடையும் பகர்ந்துள்ளார்—எதிர்பாராத விடை—யாரும் எதிர்பார்க்கக்கூடிய விடை!

தேவையா அல்லவா என்ற பிரச்சினையில் நாட்டம் செலுத்தாமல், தன்னையும், தன் தொழிலையும் பாதிக்காமல் இருக்கிறதா என்ற வகையில் ஆராய்ந்து, ஆலோசனை கூறும் திருடனைப் போன்றே, 'ஜகத் குரு சங்கராச்சாரியாரும்,' பிரச்சினை அவசியமா இல்லையா என்பது பற்றிக் கவலை கொள்ளாமல், தன் நிலையையும் தன் தொழிலையும் பாதிக்காமல் இருக்கிறதா அது, என்று பார்த்து மறுமொழி கூறியுள்ளார்!

பிரச்சினை என்ன? அப்படி என்ன ஆலோசனை கூறினார்? என்று கேட்கத் தோன்றுமல்லவா! கூறுகிறோம் கேளுங்கள்.

தனித் திருமண மசோதா (Special Marriage Bill), இந்திய அரசாங்க சட்ட அவையில் நிறைவேற்ற இருக்கிறது என்பதும், அதுபற்றிப் பலருடைய கருத்தையும் அறிந்துகொள்ளவேண்டி சுற்றுப் பார்வைக்காக, அம்மசோதா நாடெங்கும் விடப்பட்டது என்பதும், அதுபற்றிப் பலர் தங்களுடைய உள்ளக்கிடக்கையை அறிவித்துள்ளனர், அறிவித்துக் கொண்டும் வருகின்றனர் என்பதும் யாவரும் அறிந்தனவேயாகும். அந்த மசோதாவின் முக்கிய நோக்கம், சாதி, மத வேறுபாடுகளைத் தாண்டியும் மண

செய்துகொள்ளக் கருதும் கருத்தொருமித்த ஆணும் பெண்ணும், பதிவு முறையில் திருமணம் செய்து கொள்ள வழி செய்து தருவதேயாகும்.

இப்படிப்பட்ட மசோதா பற்றி 'ஆச்சார்ய சுவாமிகள்' கொண்டிருக்கும் கருத்தைக் கூறும்படி இந்திய அரசாங்கம் 'தெண்டனிட்டு'க் கேட்டுக் கொண்டதாம்! 'சங்கராச்சாரிய சுவாமிகள்' உடனே தம் 'ஞானவிழி'கொண்டு நோக்கிறார் மசோதாவை! மசோதா பற்றிய தம் 'புத்தி திக்ஷண்ய வரப் பிரசாதத்தை' வழங்கி விட்டது இப்பொழுது! இனியொரு பயமில்லை கந்தா, கடம்பா, கச்சியப்பா, காமாட்சி மணாளா என்று 'இந்துக்கள்' அர்ச்சனை புரிய வேண்டியது தான் பாக்கி!

'ஆச்சார்ய சுவாமிகள்' அருளிச் செய்த தீர்ப்பாவது; "மசோதா மூலம் திருமணம் செய்துகொள்வதற்கு அளிக்கப் பட்டிருக்கும் உரிமை, மதத்தை அழிப்பதிலும், சமுதாயத்தைச் சீரழிப்பதிலும் கொண்டுபோய் விடும். ஆகையினாலே இந்த மசோதா நிறைவேற்றப்படக் கூடாது"

மதக் காவலர் மதத்தைக் காப்பாற்ற முனைந்துவிட்டார்! அவருக்கு மதம் முக்கியம். ஆகவே மக்களின் இன்ப வாழ்வைப் பலிகொடுத்தேனும் மதத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய அவசியத்திலிருக்கிறார்! மதத்தைத் தொழிலாகக் கொண்டுவிட்டவர்களல்லவா மத குருமார்கள்—திருடன் திருட்டையே தன் தொழிலாகக் கொண்டுவிட்டதுபோல! தன் தொழில் பாதிக்காமலிருக்கத் திருடன் சிறைச்சாலை தேவையில்லை என்று எண்ணுவதுபோல, தான் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் மதத்தொழில், சீர்திருத்த மசோதாவால் சின்னபின்னமாகிவிடுமே என்று எண்ணுகிறார் 'ஜகத்குரு'! எனவேதான் மசோதா தேவையில்லை என்கிறார்! அவர்தான் என்ன செய்வார்! அவர் தலைமை வகிக்கும் 'மதம்' போதித்த கருத்துக்கள் மசோதாவால் சிதறுகின்றன! உதிரும் மதத்தைச் சோத்துப் பிடித்து வைக்கும் பணியை ஏற்றுக் கொண்ட 'ஆச்சாரிய சுவாமி'களிடத்தில், அந்த ஆலோசனையைத்தானே எதிர்பார்க்க முடியும்!

நமக்கு ஏற்படும் ஐயமெல்லாம், 'காம கோடி பீடத்தின்' கட்டளைக்கு, 'மதச் சார்பற்ற' இந்திய அரசாங்கம்

வளைந்து கொடுத்துவிடுமோ, என்னவோ என்பதுதான்!

மணம் என்பது சமுதாய அமைப்பிலே ஒன்றாம்! அது தனிப்பட்டவர்களுடைய விருப்பத்தின்படி கொள்ளப்படுவதல்லவாம்! ஒவ்வொரு சமுதாயமும் மக்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்குச் சட்ட திட்டங்கள் வைத்திருக்கிறதாம்! அதற்குக் கட்டுப்பட்டு நடந்தால் தான் சமுதாயம் வாழுமாம்! இந்து மதம் அத்தகைய சட்ட திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறதாம்! அதைப்பின்பற்றி தான் திருமணம் இருக்க வேண்டுமாம்! இந்து மத விதித்தவிதிகளுக்கு எதிராகச், சீர்திருத்தம் செய்யக் கூடாதாம்! என்றெல்லாம் 'ஆச்சார்ய சுவாமிகள்' புலம்புகிறார்!

எந்தக் காலத்திலோ, எந்தச் சூழ்நிலையிலோ, எதற்காகவோ இந்து மதம் ஏற்படுத்திய பழக்க வழக்கங்கள், தொடர்ந்துவரும் பல நூற்றாண்டுகளுக்கும் எப்படி பொருந்துவனதாக இருக்க முடியும்? பொருத்தம் இல்லை என்றுபடும்போதுதான் அவைகளை மூடப் பழக்கவழக்கங்கள் என்றும். குருட்டு நம்பிக்கைகள் என்றும் அர்த்த மற்ற சடங்குகள் என்றும் நாம் கூறுகிறோம், சீர்திருத்த மசோதாக்கள் கூறுகின்றன. இவற்றை உணர மறுக்கிறார் சங்கராச்சாரியார்-இந்த இருபதாவது நூற்றாண்டில் வாழ வேண்டிய அவசியமில்லாதவர்!

இந்து மதத்திருமணமுறையால பெண்ணுலகம் அடிமையாக்கப்படவும், பெண்கள் விலை பொருள்களாக ஆக்கப்படவும், பிள்ளை பெறும் இயந்திரங்களாகவே மட்டும் உபயோகிக்கப்படவும் ஆன நிலைமை யிருந்துவருவதால் தான் அந்தக் குறைபாடுகள் போக்கப்பட வேண்டும் என்று சீர்திருத்தக்காரர்களும், பெண்ணுலகமும் இதுகாறும் போராடி வந்தனர். அதன் விளைவே தனித் திருமண மசோதா! இது கூடாது என்கிறார் சங்கராச்சாரியார்—எத்துணை நூற்றாண்டுகளுக்கு முன்போ வாழ வேண்டியவர்!

ஒத்த நலம், ஒத்த வயது, ஒத்த பண்பு ஒத்த கல்வி ஆகிய தன்மைகளோடுகூட காதலுள்ளத்தால் கருத்தொருமித்து வாழ் வின்பம் நடத்த விரும்பும் எத்துணையோ ஆடவர்—பெண்டிரை, இந்து மதம் தன் பழமைப் பிடியால் பிரித்துவைத்துச் சமுதாயத்தைப் பாழ்படுத்தி வந்துள்ளது! சமுதாயம் பாழாவதற்கு எது காரணமாக இருந்ததோ, அந்த இந்து மதம், இப்பொழுது கண்ணீர்விட்டுக் கதறுகிறது; திருமணச் சீர்திருத்த மசோதாவால் சமுதாயம் பாழாகிவிடும் என்றும், மதம் அழிந்துவிடும் என்றும்! ஒவ்வொரு சீர்திருத்தம் ஏற்படும்போதும், இந்து மதம் இப்படித்தான் கதறி வருகிறது! சீர்திருத்தம் ஏற்படும்போதெல்லாம் மதம் அழிந்துபடுவது மட்டும் என்னவோ உண்மைதான்; சமுதாயம் அழிந்துபடும் என்ற கூற்று மட்டும் பொய்த்தே தான் வந்திருக்கிறது!

சீர்திருத்தத் திருமண மசோதாவால் மக்களின் வாழ்வின்பம் நிச்சயம் பெருகத்தான் செய்யும்! ஆச்சார்ய சுவாமிகள் அலறுகிறபடி சமுதாயம் ஒருக்காலும் தேய்ந்துவிடாது! ஆனால் அவர் கட்டிப் பிடித்துக்கொண்டு அழும் இந்து மதம் சரிந்துதான் போகும்! பேதங்காட்டிப் பிற்போக்கு வழியில் செல்லும் மதம் அழிந்துபட்டுத்தானே போக வேண்டும்! குருட்டு நம்பிக்கை ஒழிந்து நல்லறிவு வளர வேண்டுமானால். இத்தகைய சீர்திருத்த மசோதாக்கள் தேவை மிகமிகத்தேவை.

"குக்கலின் குரைப்புக்காக ஓட்டகம் தன் பயணத்தை நிறுத்திவிடாது". அதுபோல வைதிகம் குரைக்கத்தான் செய்யும், புத்துலகச் சிற்பிகளாக விளங்குவோர் நேர் வழி செல்லத்தான்வேண்டும்!

நாட்டுப் பண்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கூட்டப்படும் கூட்டங்கள், விழாக்கள், மாநாடுகள் ஆகியவற்றில் நிகழ்ச்சி தொடங்கியவுடன் முதல் நிகழ்ச்சியாக "நாட்டுப் பண்" பாடும் முறையை இனிக் கையாளும்படி கிளைக் கழகங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடிய "வளமார் எமது திராவிட நாடு, வாழ்க வாழ்கவே" என்ற திராவிடநாட்டுப்பண்ணே "நாட்டுப்பண்"ணாகக் கொள்ளப்படுகிறது.

கூட்டம் துவங்குவதற்கு முன், வேறு பல இயக்கப் பாடல்கள் பாடினாலும், கூட்டம் துவங்கியவுடன் முதல் நிகழ்ச்சியாகக் கொள்ளவேண்டியது "நாட்டுப் பண்" பாடுவதே.

இனிய குரலுடையோர், பலராகச் சேர்ந்து இசைப்பதே சிறந்தது.

பண் "மோகன"ப் பண்ணாக இருத்தல் நலம் எங்கும் ஒரே தன்மையதாக இசைக்க அது ஏற்றதாக இருக்கும்.

இரா. நெடுஞ்செழியன்,
செயலாளர், பிரசாரக் குழு,
திராவிட முன்னேற்றக் கழகம்.

குறிப்பு:—கழகத் தோழர்களின் நலன் கருதி அப்பாட்டு கீழே தரப்படுகிறது.

திராவிட நாட்டுப் பண்

பல்லவி

வாழ்க வாழ்கவே!
வளமார் எமதுதிராவிடநாடு
வாழ்க வாழ்கவே!

சரணங்கள்

(1) சூழும் தென்கடல் ஆடும் குமரி
தொடரும் வடபால் அடல்சேர் வங்கம்
ஆழும் கடல்கள் கிழக்கு மேற்காம்
அறிவும் திறலும் செறிந்த நாடு (வா)

(2) பண்டைத்தமிழும் தமிழில் மலர்ந்த
பண்ணிகர் தெலுங்கு துளுமலையாளம்
கன்னட நிகர்கன்னடமெனும் மொழிகள்
கமழக் கலைகள் சிறந்த நாடு (வா)

(3) அள்ளும் சுவைசேர் பாட்டும் கூத்தும்
அறிவின் விளைவும் ஆர்ந்திடும் நாடு
வெள்ளப் புனலும் ஊழித்தீயும்
வேகச்சீறும் மறவர்கள் நாடு (வா)

(4) அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கு நன்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு (வா)

(5) அமைவாம் உலகின் மக்களை யெல்லாம்
அடிநாள் ஈன்ற அன்னை தந்தை
தமிழர்கள் கண்டாய அறிவையும் ஊட்டிச்
சாகாத் தலைமுறை ஆக்கிய நாடு (வா)

(6) ஆற்றில் புனலின் ஊற்றில் கனியின்
சாற்றில் தென்றல் காற்றில் நல்ல
ஆற்றல் மறவர் செயலில் பெண்கள்
அழகில் கற்பில் உயர்ந்த நாடு (வா)

(7) புனலிடை மூழ்கிப் பொழிலிடை யுலவிப்
பொன்னார் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி இல்லறம் நாடும்
காதல் மாதர் மகிழும் நாடு (வா)

(8) திங்கள் வாழ்க செங்கதிர் வாழ்க
தென்றல் வாழ்க செந்தமிழ் வாழ்க
இங்குத் திராவிடர் வாழ்க மிகவே
இன்பம் சூழ்ந்தே எங்கள்நாடு (வா)

இப் பாடலைத் திராவிடத்திற்குத் தந்துதவிய புரட்சிக் கவிஞர் அவர்களுக்கு எம் வாழ்த்தும், நன்றியும்!

"மாலை மணி"

20—10—49 முதல்
அதிக பக்கங்களோடு வெளிவரும்
விலை அணு ஒன்று

ஏஜண்டுகளுக்கு;— "மாலை மணி" ஏஜண்டுகள் 20—10—49 (சென்னை) 21—10—49 (வெளியூர்) முதல் "மாலை மணி" பிரதி ஒன்று, ஒரு அணு வீதம விற்கவேண்டும். ஏஜண்டுகள் தேவைக்குரிய பிரதிகளுக்கு 18—10—49-க்குள் தெரிவித்துக்கொள்வதுடன், பிரதி ஒன்றுக்கு ரூ. 2—8—0 வீதம் முன்பணம் அனுப்பவேண்டும்.

சந்தாத் தோழர்களுக்கு:—"மாலை மணி" சந்தாதாரர்கள், தாங்கள் அனுபபியுள்ள சந்தா தொகைக்குரிய பத்திரிகைகள் மட்டும். 20—10—49 முதல் அனுப்பபபடும். தொடர்ந்து குறிப்பிட்ட காலம் வரையில் பத்திரிகை அனுப்பப்படவேண்டுமானல், அதற்குரிய அதிகப்படியான தொகையை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

—மானேஜர்.

கனங்களின் கண் கலக்கம்!

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மல் இருக்க முடியுமோ, அந்த அளவில், இந்தக் குற்றச்சாட்டுகள் ரொம்ப ரொம்ப விளக்கமற்று இருக்கின்றன, என்கிறார்கள் இரு நீதிபதிகளும்.

'தலைமறைவாக இருந்தவருக்குத் துணை செய்தான்-கொள்ளையடித்தான்-தீவைத்தான்' என்று தோழர் சத்தியநாராயண மீது குற்றஞ்சாட்டி, சிறையில் தள்ளி மூடியது, சர்க்கார்!

"விளக்கமாக இல்லை-குறிப்பாக இல்லை-விவரம் இல்லை எதறகுத் தீவைத்தார்-எங்கே கொள்ளையிட்டார்-இவைகள் தெளிவாக்கப்படவில்லை'-நீதிபதிகள் கண்டு கூறும் முடிவு!

*   *   *

இளைஞர்களுக்கு உடல் பயிற்சி அளித்தான்-குறுந்தடி தாங்கிடும் படைப்பயிற்சி தந்தான்-புரட்சிக் கருத்துக்களைப் போதித்தான்-வர்க்கபேதத்தைக் கிளப்பினன்' நரசிம்மமூர்த்தி என்பது, சர்க்காரின் சாமாத்தியமான குற்றச்சாட்டுகள்!

"உடற் பயிற்சி யளிப்பது குற்றமல்ல—குறுந்தடியைக் கையில் பிடித்துப பயிலுவதும் சட்டவிரோதமல்ல—புரட்சிக் கருத்துக்களைப் பரப்புவதும் தண்டனைக்குரியதல்ல- வெளியே விடுகிறோம்"—இரு நீதிபதிகள் தரும தீர்ப்பு இது.

*   *   *

"எல்லையோரமுள்ள சிற்றூர்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டவிரோதமானத் துண்டுப் பிரசுரங்களை வழங்கினன், அங்குள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் தினசரி நடவடிக்கைகளை கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு அறிவித்தான்—'என்பன போன்ற மாபெரும்குற்றங்களை, தோழர் எல்லையா செயதார் என்று தீர்மானித்து, அவரைக் காவலில் வைத்தது சர்க்கார்!

"இவை செய்யக்கூடாததல்ல—பாதுகாப்புச் சட்ட விதிகளுக்குட்பட்ட வேறு குறிப்பானக் குற்றச்சாட்டுகள் வேண்டும்— அவை இல்லை"—என்று சுட்டிக்காட்டிவிட்டு, எல்லையாவிற்கு விடுதலை தந்தனர் நீதிபதிகள்.

*   *   *

"1946-ல் ஜமீன் குடிகளின் துன்பம் துடைக்க பணிபுரிந்தான்—குறிப்பாக ஜமீன்தாரி மசோதாவிற்காகத் தொண்டாற்றினன்"-என்று குற்றஞ்சுமத்தி, சர்க்கார் ராஜகோபால் ராவை சிறையில் வைத்தது!

"பாதுகாப்புச் சட்டத்தின் விதிகளுக்குள் அடங்காதது-அதுவும் 1946-ல் நடைபெற்றதாகச்சொல்லப்படுவது"-என்று எடுத்துக்காட்டி, நல்ல தீர்ப்பு வழங்கியுள்ளனர் நீதிபதிகள்.

உயர்நீதிமன்றத்து நீதிபதிகள் தரும் நல்ல தீர்ப்பு இவை,—பாதுகாப்புக் கைதிகளுக்குமட்டுமல்ல-தன்னடித்தப் போக்காக, நாடாளுகிறார்களே நமது ஆளவந்தார்கள், அவர்களுக்கும் சோதனைதான். ஏதோ தவறு செய்வது மனித இயல்புதான் என்றாலும், செய்தது தவறு என்று சிறந்தவர்கள் எடுத்துக்காட்டுகின்றபொழுது, தவறைத் திருத்திக்கொண்டு, நேர்மை வழியைத் திரும்பவும் கடைப்பிடிப்பதும் மனித இயல்புதான். ஆனல், நமது ஆளவந்தார்கள்தான் நம்மைப்போன்ற சாதாரண மனிதர்களாக இல்லையே! கனங்களாகவல்லவோ இருக்கிறார்கள்! இரண்டு ஆட்களாக இருக்கிறபோது, நீதிபதிகள் இடிமேல் இடி இடித்தாலும், நேர்மைப்பாதைக்குத்திரும்பவா போகிறார்கள் நமது ஆளவந்தார்கள்! நீதிபதிகளின் தீர்ப்பைக் கேட்டு மனம் மாறிவிட்டால், அமைச்சர்களின் கௌரவத்திற்குக் களங்கம் ஏற்பட்டுவிடுமே! அதற்கு என்ன செய்வது? மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டாலும், நிரபராதிகள் சிறையிலே வாடிவதங்கினாலும், நாடு நலிந்தாலும், சரி நீதிதொலைந்தாலும், மந்திரிகளின் கௌரவம் காப்பாற்றப்படவேண்டியதுதானே முக்கியம்!

'ஜனதா' மீது சர்க்கார் பாய்ச்சல்

இந்தியப் பத்திரிகைகள் அவசரச் சட்டப்படி 'ஜனதா' அச்சுக்கூடத்துக்கு 1000 ருபாய் ஜாமீன் தொகையாகக் கட்டவேண்டுமென்று சென்னை சர்க்கார் கட்டளை இட்டிருக்கிறது.

சதுரமைல் :: :: தேசபக்தி!

"சென்னை மாகாணத்திலுள்ள 22 ஜில்லாக்களில் 11 ஜில்லாக்கள் ஆந்திரர்களுக்கும, 11 ஜில்லாக்கள் தமிழர்களுக்கும கிடைக்கின்றன இதன்படி ஆந்திரர்களுக்கு 67000 சதுர மைல் நிலமும். தமிழர்களுக்கு 49000 சதுர மைல் நிலமும கிடைக்கின்றன."

திராவிட வாலிபர் கழகம், பொன்மலை. அறிவிப்பு

தோழர்களே!

பொன்மலை திராவிட வாலிபர் கழகம் சென்ற 9 ஆண்டுகளாக சுயமரியாதை இலட்சியத்திற்கும் திராவிடர் முன்னேற்றத்திற்கும் தொழிலாளர் நலன்களுக்கும், இடையறாது உழைத்து வருவது யாவரும் அறிந்ததே.

சென்ற சில மாதங்களுக்கு முன் கழக இலட்சியத்திற்கும், கொள்கைகளுக்கும், முரணாகத்திராவிடர்கழக தலைவர் பெரியார் ஈ. வே. ரா. தான் பொருந்தாத் திருமணம் செய்து கொண்டதை 13-7-49ல் பொன்மலை திராவிட வாலிபர் கழகக் கமிட்டி ஏகமனதாக கண்டித்துத் தீர்மானம் செய்து இருந்ததும். இப்போது, கண்டித்தவர்களில் ஒரு சிலர் மாறி கழக அங்கத்தினர் அல்லாதவர்களையும், கழக கட்டுப் பாட்டிற்கு எப்பொழுதுமே கட்டுப்படாத ஒரு சிலரையும், பிற்போக்காளர்களையும் சேர்த்துக் கொண்டு திராவிட வாலிபர் கழகம் என்ற பெயரிலே, 13—10—49 ல் பொன்மலை பட்டியில் அங்கத்தினர்கள் கூட்டம் நடக்கப் போவதாகக் கழக நிர்வாகிகளுக்கு நோட்டீஸ் வந்திருப்பதுடன் வெளியூர் 12—10—49 விடுதலையிலும் வெளிவந்திருக்கிறது.

ஆகையால் அந்தக் கூட்டத்தில் செய்யப்படும் எந்த முடிவும் பொன்மலை திராவிட வாலிபர்கழகத்தைக் கட்டுப்படுத்தாது என்பதோடு அதற்கும் கழகத்திற்கும் எவ்வித சம்பந்தமில்லை. ஆகவே பொதுமக்களும், இயக்கத்தோழர்களும், கழக அங்கத்தினர்களும இவர்கள் விஷயத்தில் மிகுந்த ஜாக்கிரதையாக இருக்கும்படியாகவும், கழக வேண்டுகோளின்றி யாரும் பொருளுதவி செய்ய வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இஙஙனம்,
M. நம்பிக்கைராஜ்,
தலைவர்.
G V. கோபால்,
கழகச் செயலாளர்
பொன்மலை,
12—10—49

குறிப்பு:—முழுவிபரம் பின்னல் வெளிவரும்.

முகவரி மாற்றம்

திராவிட முன்னேற்றக கழக அலுவலகம் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. தி. மு. கழக சம்பந்தமாக அஞ்சல் எழுதுவோர் இனிக்கீழ்கண்ட முகவரிக்கே எழுதுமபடி கேட்டுக்கொள்ளபபடுகிறார்கள்.

முகவரி:—
2/45, முத்துமாரிச் செட்டித் தெரு,
மண்ணடி. :: சென்னை-1.

இனி நடப்பவை

ஆம்பூர்— 16-10-49 ஞாயிறு காலை 9-மணிக்கு தி. மு. கழகக் கொடியேற்று விழா இவ்வூர் கடை வீதியில் நடைபெறும். கழகத் தோழர்களும, மற்றையோரும் வந்து விழாவைச சிறப்பிக்கும்படி வேண்டப்படுகிறார்கள்.

*   *   *

திருவனந்தபுரம்— திராவிட முன்னேற்றக கழகம்- திருவனந்தபுரம் நகரக் கிளையின் திறப்புவிழா. 16-10-49 ஞாயிறு அன்று மாலை இந்நகர் விக்டோரியா ஜுப்லி டவுன் ஹாலில் நடைபெறும. தோழர்கள் அன்பழகன், மனோகரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

*   *   *

திருச்சேறை— திராவிட முன்னேற்றக் கழக இவ்வூர் கிளையின் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் 19-10-49 புதன் மாலை 5-மணிக்கு நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத் (ஆசிரியர், "புது வாழ்வு"), எஸ். கே. சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

*   *   *

திருவொற்றியூர்— 16-10 49 ஞாயிறு காலை 9-மணிக்கு இவ்வூர் தி. மு. கழகக் கட்டிடத்தில் தி. மு. கழகக் கொடியேற்று விழா நடைபெறும். அங்கத்தினர்கள், அனுதாபிகளனைவரும் தவறாது கலந்துகொள்ளும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

*   *   *

வேலூர்—திராவிட முன்னேற்றக் கழகம்—வேலூர் நகரக்கிளையின் துவக்க விழா 16—10—49 மாலை 6மணிக்குக் கோட்டை வெளியில் நடைபெறும். அதுபோது தோழர்கள் சி. பி. சிற்றரசு, சே. எ. மதியழகன் ஆகியோர் சொற்பொழி வாற்றுவர்.

*   *   *

திருப்பூர்- 16—10—49 ஞாயிறு மாலை 6மணிக்கு இவ்வூர் 8/20 எண்ணுள்ள தோழர் என். பால்ராஜ் அவர்கள் இல்லத்தில் திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகத் துவக்க விழா நடைபெறும். அதுபொழுது தோழர் எ. பி. சாமி தலைமையில், தோழர்கள் கே. எஸ். மணி, டி. நடராசன், எம். என். அண்ணு, டி. வி. பி. அப்பன், எ அரசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

*   *   *

இலையூர்நன்னிலம்தாலுக்கா இலையூர் தோழர் உலகிறைவனார் (எஸ். ஜெகன்னாதன்) அவர்கள் இல்லத்தில் 15-10 49 சனி மாலை 5 மணிக்கு இலவச நூல் நிலையம் ஒன்று புதிதாய் அமைக்கப்படும். தோழர் கே. கே நீலமேகம் ஷை நூல் நிலையத்தைத் திறந்து வைப்பார். தோழர் உலகிறைவனார், அறிஞர் அண்ணாதுரையின் உருவப்படத்தைத்திறந்து வைப்பார். தோழர் எஸ். கே. சாமி சொறபொழிவாற்றுவார்.

*   *   *

திருச்செங்கோடு:—திராவிட முன்னேற்றக் கழகம்—திருச்செங்கோடு கிளையின் துவக்க விழாப் பொதுக்கூட்டம். 16—10—49 ஞாயிறு மாலை 6 மணிக்கு தோழா என். கே. பி. வேல் அவர்கள் தலைமையில் இவ்வூர் 40—கால் மண்டபத்திற்கு முன்பு நடைபெறும். அதுபோது தோழர்கள் அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி, சேலம் எ. சித்தையன். கோபி, ஜி. என். இராசு மற்றும் பலர் சொறபொழிவாற்றுவர்.

*   *   *

பல்லடம்—திராவிட முன்னேறறக் கழக இவ்வூர் கிளையின் ஆரம்ப விழா, 19-10-49 புதன் மாலை 4 மணிக்கு இவ்வூர் யூ. எம். எஸ். பஸ்ஜங்ஷனில் நடைபெறும. அதுபோது தோழர் பெத்தாமபாளையம பழனிசசாமி அவர்கள் தலைமையில் தோழர்கள் அறிஞர், சி. என். அண்ணாத்துரை எம். ஏ, எஸ். ஆர். சுப்பிரமணியம், பி. எம். பொன்னுசாமி மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

மதுரை— திராவிட முன்னேற்றக கழகம்- மதுரை நகரக் கிளையின் அமைப்புக் கூட்டம இவ்வூர் விக்டோரியா எட்வர்டு ஹாலில் சென்னைத தோழர் என். ஜீவரத்தினம தலைமையில் 16 10-49 ஞாயிறு காலை 9-மணிக்கு நடைபெறும. அன்று மாலை 6-30 மணிக்கு கிருஷ்ணராயர் தெப்பக்குள மைதானத்தில் ஷை கிளைகழகத்தின் துவககவிழாப பொதுககூட்டம நடைபெறும். அதுபோது தோழர்கள என். ஜீவரத்தினம, டி கே சீனிவாசன், எம அய்யாசாமி, கே. எஸ். ராஜாராமன் ஆகியோர் சொற்பொழிவாறறுவர்.

*   *   *

திருச்சி—திராவிட முன்னேற்றக் கழகம்—திருச்சி நகரக் கிளையின் துவக்க விழா 16—10—49 ஞாயிறு மாலை 6-மணிக்கு இந் நகர் டவுன் ஹாலில் நடைபெறும். அதுபோது தோழர் என். சங்கரன் தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., எஸ். அப்பாவு, எஸ். நெடுமாறன், கு. பாராங்குசம ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

*   *   *

புதுக்கோட்டை— திராவிட முன்னேற்றக் கழகம்—புதுக்கோட்டைநகரக்கிளையின் தொடக்க விழா. இவ்வூர் ராஜா டாக்கீஸில் 16—10—49 ஞாயிறு காலை 10 மணிக்கு தோழர் எ. தியாகராசன், அவர்கள தலைமையில் நடை பெறும. அப்பொழுது தோழர் இரா. நெடுஞ்செழியன் எம. ஏ. சொறபொழி வாறறுவர்.(இடமும், தேதியும மாறறம செய்திருப்பதைத் தோழர்கள் கவனிககுமபடி வி. உறுப்பினர் அறிவிககிறார்.)

*   *   *

வடசென்னை — வடசென்னை 3வது வட்டம் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் 15—10—49 சனி இரவு 8 மணிக்கு இராயபுரம் 10 கிரேஸ்கார்டன் 1வது தெரு இல்லத்தில் நடைபெறும். இதையே அழைப்பாக ஏற்றுத் திராவிடத் தோழர்களனைவரும் வரும்படி நாஸ்திகன் காசராஜன், எஸ். பி. டி. திராவிடமணி ஆகியோரால் அழைக்கப்படுகிறார்கள்.

*   *   *

சென்னை மைலாப்பூர்-15-10-49 இரவு 8-மணிக்கு மயிலை அரங்கநாத புரம தெரு 10-எண்ணுள்ள இல்லத்தின் மேல்மாடியில் தி. மு. கழக (மயிலைக் கிளை) பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும. உறுப்பினர்கள் சேர்ப்பது, துவக்க விழா நடத்துவது ஆகியவைபற்றி பேசவேண்டியிருப்பதால், உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு வருகை தருமாறுத் தோழர் மயிலைநாதன் வி. உறுப்பினர் வேண்டுகிறார்.

*   *   *

கார்ந்தை—16-10-49 ஞாயிறு காலை 8-30 மணிக்கு கார்ந்தைத் "தமிழ்ப்பெருமன்றத்"தில் 'கார்ந்தைத் தமிழ்ச்சங்கம்' 'கார்ந்தை புலவர் கல்லூரி' ஆகியவைகளின "முன்னாள் மாணவர் கழகம" அமைப்புக்கூட்டம் நடைபெறும. அதுபோழ்து கல்லூரி, பள்ளி ஆகியவைகளினின்றும் வெளியேறிய முன்னாள் மாணவர்கள் வந்து கலந்துகொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள். எனத் தோழர் என். எஸ். சண்முகவடிவேல எழுதுகிறார்.

திராவிட முன்னேற்ற மாணவர் கழகம்

திருப்பூர், அக். 2—

இவ்வூர் திராவிட முன்னேறற மாணவா கழகக் கூட்டம் இனறு இரவு 8-30கு கழகக் கட்டிடத்தில நடைபெற்றது மாணவத் தோழா இளங்கோ "மாணவர்களின் எதிர் காலம்" என்பது பற்றிப் பேசினா. தொடாந்து தோழாகள் அண்ணு, முக்கண்ணன்; ஆகியோர் பேசினா. தோழா அரசு நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் அரசு அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

சென்னை ஒட்டேரி—நகரஉட்கிளை

சென்னை, அக். 3—

2-10-49 ஞாயிறு காலை 10 மணிக்கு சென்னை புரசை வெஙகட்டம்மாள் தெரு, 1-ம் எண்ணுள்ள தோட்டத்தில், சென்னை ஒட்டேரி திராவிடர் கழகப்பொது உறுப்பினர் கூட்டம் தோழர் ஏ.கே. சாமி அவர்கள் தலைமையில் கூடியது. கிழ்க்கண்ட தீர்மானஙகள் நிறைவேறின.

21—8—49ல் மேற்கு சென்னைக் கழக நிர்வாகக கமிட்டி முடிவு செய்தபடி பெரியாரின் தொடர்பிலிருந்து விலகுவது என்ற தீர்மானத்தை ஒரு மனதாக இக்கூட்டம் ஒப்புக்கொள்கிறது என்று தீர்மானிக்கப்பட்டது.

"திராவிடமுன்னேற்றக் கழகம்-சென்னை நகர ட்டேரி உட்கிளை" என்ற புதிய அமைப்பை ஏற்படுத்திக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. மேலும் இரண்டு தீர்மானஙகள் நிறைவேற்றப்பட்டு புதிய செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் — ஏ. கே. சாமி; துணைச செயலாளர் — ஜே. எஸ். மணி; பொருள் உறுப்பினர்—பி. சுப்பிரமணி; விளம்பர உறுப்பினர்-ஆர். டி. அரசு.

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—கே. வரதன், எ. இராமலிங்கம், எம. ஏகாம்பரம், ஜே. எஸ். தாசன், பி. ஆர். பி. சாமி, எம. சண்முகம, ஆர். எம். தாசன், ஏ. நடராசன், பி. ஜகநாதன், எம். மூர்த்தி, வாசுதேவன்.

அக்டோபர் திங்களில் ஒரு சிறப்பான பொதுக்கூட்டம் நடத்துவது என்றும், ஒவ்வொரு ஞாயிறு தோறும குறள் அல்லது பேசசுப் பயிறசி நடத்துவதென்றும் முடிவு செய்து கொண்டு, குறள் வகுப்பை நடத்துவதற்கென புலவர் வே. த. அரசுணஞர் அவர்களையும் கேட்டுக் கொளவதெனத் தீர்மானிக்கப் பட்டது. செயலாளர் நன்றிகூற, பகல 12மணிககுக் கூட்டம இனிதுமுடிந்தது. என விளம்பர உறுப்பினர் அறிவிககிறுர்.

* * *

கமுதி—நகரக்கிளை

கமுதி, அக். 9—

இவ்வூர் திராவிடா கழக உறுப்பினாகள் கூட்டம் இன்று இரவு 8-மணிககுத் தோழர் இ. எல். எம். சௌந்திரபாண்டியன் அவர்கள இல்லததில் தோழர் பரந்தாமன் அவர்கள் தலைமையில் நடைபெறறது. அதுபோது தி. கழகம கலைக்கபபட்டுத, "திராவிட முன்னேற்றக் கழகம்—கமுதி நகரக் கிளை" அமைக்கப்பட்டது- கீழ்க்கண்ட புதிய செயறகுழுவும் தேர்ந்தெடுக்கப் பட்டது.

செயலாளர்:—வீ. வீராச்சாமி, பொருள் உறுப்பினர்-இ. எல். எம. சௌந்திர பாண்டியன்; விளம்பர உறுப்பினர்-வே. த. பாண்டியன், மறற செயற்குழுவினர்கள்-தட்சிணமூர்த்தி, பால குருசாமி, சொக்கலிஙகம, பரந்தாமன், கணபதி சுந்தரம, ராஜாராம. எனத் தோழர் வீ. வீராகவன் (செயலாளர்) வரைகிறுர்.

* * *

மதுரை மேற்குவட்டம்—நகரஉட்கிளை

மதுரை, அக். 9—

இன்று மாலை 6 மணிக்கு தோழா பி. எஸ். சோமநாதன், தலைமையில் மதுரை மேற்கு வட்டம பெருமாள கோவில் தெரு, தெப்பககுளம அருகிலுள்ள கட்டிடத்தில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம நடைபெறறது. அப்பொழுது சில தீர்மானஙகள் நிறைவேறறப்பட்டுத, 'திராவிட முனனேற்றகழகம—மதுரை நகர மேற்கு வட்ட உட்கிளை" நிறுவப்பட்டது. கீழ்ககண்ட செயறகுழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—சி. நடராசன்; துணைச்செயலாளர்கள்:-அ. சுந்தராசன், ப. முத்துசாமி' நிதி உறுப்பினர்:—சி. சேதுராமன்; விளம்பர உறுப்பினர்கள்:—எஸ். ர. சாமி, ஆ. சோ. ராசு. மற்ற செயறகுழுவினர்;—பி. எஸ். சோமநாதன, க. ரஙகராசன், ம. பால் அதிசயராசு, சா. பொன்னிராசு, சோ. கடம்பவனம், ஏ, ஆர். சாமி, ம. ராமசாமி. தோழர்கள் சி. நடராசன், ம. பால் அதிசயராசு இருவரும் நகரக்கிளைக்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்செயலாளர் நன்றி கூறக கூட்டம் இனிது முடிந்தது. என விளம்பர உறுப்பினர் வரைகிறுர்.

* * *

புதுவை—நகரக்கிளை

புதுவை, அக். 9—

புதுவை தி. மு. கழக அமைப்புக்கூட்டம் 8—10—49ல் தோழர் செ. கோவிந்தராசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் வை. கணேசன் கூடடத்தினரை வரவேற்றுப் பேசினர். தோழா சு. மன்னர் மன்னன் தி. மு. கழகத்தினரிடையே இருக்கவேண்டிய கட்டுப்பாடுபற்றியும, பணியாற்றும உறுதியைப்பறறியும விளககினர். அதன்பின் கீழ்வருமாறு செயற்குழு நிறுவப்பட்டது.

செயலாளர்;—வை. கணேசன்; துணைசெயலாளர்:—இராம. கோதண்டபாணி; நிதி உறுப்பினர்:—த. மு. கண்ணையன்; விளமபரஉறுப்பினர்:—சு. மன்னர் மன்னன், மற்றய செயற் குழுவினர்கள்:—செ. கோவிந்தராசு, எம. ஏ சண்முகம, ந. வேஙகடத்தாசன், கு. முருகையன், துரைசுப்பிரமணியம், இராச பெரியசாமி, நாரா. தீனதயாளன். பின் செயலாளர் நன்றிகூறக் கூட்டம இனிது முடிவுறறது. எனத் தோழா சு. மன்னர் மன்னன் (வி. உறுப்பினர்) தீட்டுகிறுர்.

* * *

தூத்துக்குடி மேலச்சண்முகபுரம்-நகர உட்கிளை

மேலசசண்முகபுரம், அக். 9—

இன்று காலை 10 மணிககு மேலச்சண்முகபுரம தி. மு. கழக உறுப்பினாகள் தோழர் மா. மாசானமுத்து அவர்கள் தலைமையில் கூடி "திராவிட முன்னேறறக் கழகம—தூத்துககுடி நகர மேலசசண்முகபுரம உட்கிளை' அமைத்தனர். கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—அ. வேதநாயகம்; துணைச்செயலாளர்:—பொ. சென்பகலிஙகம், பொருள் உறுப்பினர்:. சு. கருப்பசாமி, விளமபர உறுப்பினா:— இரா. தனுஷ்கோடி.

ஏனைய செயறகுழுவினர்கள்:—ச. தஙகவேல், ச. திரவியம, மூ. ஆதிசாமி, மா. மாசானமுத்து, வ. அருணசலம. சில தீர்மானஙகள் நிறைவேறறப் பட்டுச செயலாளர் நன்றி கூறலுடன், கூட்டம முடிவுறறது. எனத் தோழர் அ. வேதநாயகம (செயலாளர்) அறிவிக்கிறுர்.

* * *

செயங்கொண்டம்—சிற்றூர்க்கிளை

செயஙகொணடம, அக். 9—

இவ்வூர் தோழர் கே பி. முகமது காசிம அவர்கள கடையில் இன்று நடைபெறறக கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம-செயஙகொணடம சிற்றூர்க்கிளை" நிறுவபபட்டுச, செயற்குழுவொன்றும தேர்ந்தெடுக்கப்படடது.

செயலாளர்:-வி. இராசகோபால்; துணைச செயலாளர்:—எல். விசுவநாதன், பொருள் உறுப்பினர்:—கே. பி. முகமது காசிம், விளம்பர உறுப்பினர்:—கே. எஸ். காசிம்.

ஏனைய செயற்குழுவினர்கள்:—கே. பி. முகமது காசிம், கே. எஸ். காசிம், வி. இராசகோபால். எல். விசுவநாதன், ஏ. சாமிஞதன். எனத் தோழர் கே. எஸ். காசிம எழுதுகிறுர்.

* * *

மணக்கால்—சிற்றூர்க்கிளை

மணககால், அக். 10—

9—10—49 ஞாயிறு இரவு நடைபெற்றக் கூட்டத்தில் "திராவிட முன்னேறறக் கழகம்—மணககால் சிற்றூர்க கிளை" நிறுவப்பட்டு, செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

செயலாளர்:—ம. ச. மணிவேலன், நிதிஉறுப்பினர்:— ம. சி. சோமசுந்தரம், விளம்பர உறுப்பினர்:—எம. பகவதி.

ஏனைய செயலுறுப்பினர்:—சி. பரமசிவம்; அ. தஸ்தகீர், ஆ. மணக்கி, ம. முத்து, ரா. பிரசன்னம. எனத்தோழர்எம. பகவதி (வி. உறுப்பினர்) தீட்டுகிறுர்.

* * *

மேட்டுப்பாளையம்—சிற்றூர்க்கிளை

மேட்டுப்பாளையம், அக். 10—

இவ்வூர் திராவிடர்கழகச செயறகுழுக கூட்டம 6-10-49-ல சி. மு. சஙகததில், தோழர் க. இராமன அவர்கள தலைமையில் நடைபெறறது. அதுபோது தி. கழகம, 'திராவிட முனனேற்றக கழகம மேட்டுப்பாளையம்- சிறறூர்க கிளை' என மாறறப்பட்டது. பின்புசெயறகுழு அமைககப்பட்டது.

செயலாளர்- கு. சண்முகம; பொருள் உறுப்பினர்- அ. இராமசசந்திரன்; விளம்பர உறுபபினர்- க. இராமன். ஏனைய செயறகுழுவினாகள்- கு. நடராசன், கு. வடிவேலன, தா. மஸ்தான், க. பழனியாண்டி. பின்பு சில தீர்மானஙகள நிறைவேற்றப்பட்டுக் கூட்டம முடிந்தது. எனத தோழர் கு. சண்முகம வரைகிறுர்.

* * *

சோழவந்தான்—நகரக் கிளை

சோழவந்தான், அக். 10—

இவ்வூர் திராவிட முனனேற்றக் கழக அமைபபுக கூட்டம் 8-10-49 அன்று, "பனகல இல்லததில் தோழா ந. இராமையா தலைமையில நடைபெறறது. கூட்டத்தில, சோழவந்தான் தி. கழகம கலைக்கபபடுத் "திராவிட முன்னேற்றக கழகம-சோழவந்தான் நகரக கிளை' நிறுவுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. பின்பு, புதிய செயறகுழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- தா. ஆவுடையப்பன்; துணைசெயலாளா- ந. இராமையா; நிதி உறுப்பினர்- ச. பழனியாண்டவன்; விளமபர உறுப்பினா- மா. கந்தசாமி. ஏனைய செயலுறுப்பினர்கள்- ம. ராசு, பவுனராசு, ராசப்பன், மு. பெரியசாமி, மொ. அப்துல்காதர், வீராசாமி, வெ. பழனிசசாமி, ஆ. குருசாமி, பெ. நடராசன், தாளமுத்து, ச. இராககன், சு. நாராயணன, கா. அப்துல்சலாம். மேலும சில தீர்மானஙகள, நிறைவேற்றப்பட்டுக கூட்டம முடிவுறறது, எனத் தோழா மா. கந்தசாமி (விளமபர உறுப்பினர்) வரைகிறுர்.

* * *

பட்டாபிராம் தண்டுறை—சிற்றூர்க் கிளை

ப. தண்டுறை, அக. 10—

பட்டாபிராம தண்டுறை திராவிட முன்னேறறக் கழக அமைப்புக கூடடம 9-10-49 காலை 8—மணிககு நடைபெற்றது. அதுபோது இவ்வூர் திராவிட இளைஞர் கழகம "திராவிட முன்னேற்றக கழகம—பட்டாபிராம் தண்டுறைச சிற்றூர்க கிளை" என மாற்றியமைககப்பட்டுக கீழ்க்கண்ட செயறகுழுவினர்கள் தேர்ந்தெடுக்கப்படடனர்.

செயலாளர்— சி. என். மகாதேவன்; பொருள் உறுப்பினா- ஜேஸ்தாஸ்; விளமபர உறுப்பினர்— எம. பக்தவத்சலம. ஏனைய செயற்குழு உறுப்பினர்கள:—அப்பாசாமி, சுந்தரம, பாலு, ஜார்ஜ். எனத் தோழர் சி. என். மகாலிஙகம அறிவிக்கிறுர்.

காங்கிரஸ் கட்சி எவ்விதத்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னும் சரியான பயன் தாத்தக்க பார்லிமெண்ட்டரி முறை அமையவில்லை. காங்கிரஸ் கட்சி எந்த விதமான திட்டமுமின்றி அதிகாரத்தை மட்டிலும் பெற்றிருக்கிறது, ஒரு தொழிற கட்சியபிமானி (நேரு)யும், ஒரு கன்சா வெட்டி (படேல்)யும் காங்கிரஸ் கட்சியைத் தலைமை தாங்கிநடத்துகின்றனர். அந்தக் கட்சி, சோஷலிச முறையிலோ அல்லதுசுதந்தரமாகத்தொழிலை வளர்க்கும் முறையிலோ இந்தியாவுக்கு ஒரு தெளிவான பொருளாதாரத திட்டத்தை, பொருளாதார அமைபபை வகுப்பதை நழுவவிட்டு விட்டது. "குறைந்த பட்சம் 10 ஆண்டுகளுக்காவது முக்கியமான கேந்திரத்தொழில்களை எல்லாம் தேசியமயமாக்கும் வேலையை மேறகொள்ளப போவதில்லை" என்று பண்டிட் நேரு கடந்த வாரம அறிவித்துள்ளார். வர்த்தகர்கள் இதனுல் தங்கள் நிலைக்குத் தலைவு ஏறபடாது என்ற உறுதி கிடைககப் பெருமற் போயினா.

இந்த வெறுப்பும் அருவருப்புமான நிலைமையைத் தஙகளுக்குச சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள மற்ற சக்திகள் பெருமுயறசி எடுத்துக் கொண்டிருக்கின்றன. ஒரு கோடியில, முஸ்லீம்கள்மீது பெருந்துவேஷமும் வெறுப்பும கொண்ட மதவெறி மிக்க இந்துமகாசபை பாக்கிஸ்தான்மீது போர் துவக்கவேண்டுமென்று கூறிக்கொண்டிருக்கிறது. அண்மையிற் கடந்த வாரங்களில் மூன்று முறை, நேருவைக் கொலைசெய்துவிடத் தீவிரப் புரட்சிக்காரர்கள் முயறசித்தனர். வங்காளமோ நாளுக்கு நாள, அதிதீவிரவாதிகளின் தலைவாகிய சரத்போசுக்கு ஆதரவைப் பெருக்கிக்கொண்டேயிருக்கிறது. இந்த சரத்போஸ் எனபவர், ஜப்பானியருக்கு ஆதரவாயிருந்த வீரனுகிய 'கொடிய' சுபாஷ் போசின் சகோதரா. சுபாஷ் சந்திரபோசின் மீது பறறுக் கொண்டு அவரைப் பின்பற்றுபவர்கள் 1945-ல் ஆகாய விமானம் முறிந்து விழுந்ததனுல் ஏறபட்ட விபத்தில் அவர் கொல்லப்பட்டுப் போனுர் என்பதை நம்ப இன்னும் மறுக்கின்றனர். கல்கத்தாவிலுள்ள சுபாஷ் போசின் வீட்டில், அவா திரும்பிவருவதை எதிர்பாாத்து, அவருடைய துணிமணிகளை எல்லாம் ஒழுங்காக எடுத்து வைத்து, அவருடைய வருகையை எதிர் நோக்கிக்காத்துக் கொண்டிருக்கின்றனா. இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியோ ஆசியாவிலுள்ள மிகச்சிறிய கட்சியாகும். இதில, சுமாா 60,000 பேரே உறுப்பினாகளாயுள்ளனா. இது மிகச சிறுகட்சியாக இருந்தபோதிலும் எப்போதும் சுறுசுறுப்பாகவும, அதன் கூச்சல் எங்கும் கேட்கக் கூடியவாறும், அது இருப்பதை அனைவரும் அறியுமாறும் செய்துகொண்டு வருகிறது. இந்தியாவின் சிறைச்சாலைகள் அனைத்தும் கம்யூனிஸ்ட்களாலும், காங்கிரஸ் கொள்கைக்கு உடனபடாதவர்களாலும் நிறைந்து இடமின்றிக் கிடக்கின்றன.

இவவணணம தொல்லைகள் பெருகிக் கொண்டேயிருந்த போதினும காங்கிரஸ்கட்சி இன்னும்கூட மூன்று பெரிய வலிமைககுரிய சாதனங்களை உடையதாகத்தானிருந்து வருகிறது. அதாவது, 1. நேருவிடமுள்ள கவர்ச்சிகரச்சக்தி, 2. பட்டேலின் அமைப்புத்திறன், 3. இன்னுங்கூட திறமையை விட்டுவிடாத மோகன்தாஸ் கே காந்தியின் ஆவி.

லட்சக்கணக்கான இந்தியர்களுக்கு காந்தியின் நண்பரான நேரு இன்னுங்கூடத் தந்தைக்குரிய அன்புடன் கூடிய பாதுகாவலராகவே விளங்குகிறா. நேரு, தம் மக்களைப் பார்க்கவும், தம்மக்கள தம்மைத் தரிசித்துக் கொள்ளவும் வேண்டி தம்முடைய அகன்ற நாடு முழுவதிலும் நேரு சலிபபின்றிக் களைபபின்றிச் சுற்றுப் பிரயாணம் செய்கிறுர். நேருவைத் தவிர, இன்று இந்தியாவில் மக்களின் மதிபபையும் நம்பிக்கையையும் பெறக்கூடிய பெருந் தலைவர் வேறு எவரும் இருக்க முடியாது. 59—வயதுடைய, காநதியைப் பின்பற்றும், நேரு ஒருவர் தான் இப்பேற்றைப் பெற்றுள்ளார். நேருவையும் அவருக்கடுத்தாற்போல் பட்டேலையும தவிர வேறு எவருமிருப்பதாக எண்ணுபவர் இந்தியாவில் ஒருவர் கூட இருக்க முடியாது.

[பண்டிட் ஜவஹர்லால் நேருவிடம் பேரபிமானம்கொண்டதும் பல்லாண்டுகளாகக் காஙகிரசைப் பெரிதும ஆதரிததுக்கொண்டுவந்தது மாகிய அமெரிக்கா "டைம்" எனனும வாரச செய்திப் பத்திரிகை இவ்வாறு எழுதியிருக்கிறது.]

நாகம்மையார் சீர்திருத்த நாடக சபா

கோவில்பட்டி, அக். 6—

இவ்வூர் நாகமமையார் சீர்திருதத நாடகசபாவின் மாதாந்திரக் கூட்டம 5-10-49-ல நடைபெறறது. அவ்வமயம தறபொழுது பயிற்சியிலிருந்துவரும் 'கொலைகாரன்' எனனும நாடகத்தை நடிப்பதெனத் தீர்மானிககப்பட்டது. ஷ கூட்டத்திறகுத் தோழர் இராமகிருட்டினன் தலைமை வகிததார். செயலாளர் நன்றி கூற கூட்டம முடிவுறறது. எனத தோழர் சு. மா. இரததினம (செயலாளர்) எழுதுகிறுர்.

சந்தா விவரம்

20—10—49 முதல்

3 மாதம் சந்தா	ரூ	6—0—0
6 மாதம் சந்தா	,,	12—0—0
ஒரு வருடசந்தா	,,	24—0—0

மூன்று மாதத்திற்கு குறைந்த சந்தா ஏறறுக்கொள்ளபபட மாட்டாது.

மானேஜர்:

"வழிகாட்டி"

மருத்துவர் சமூக முன்னேற்ற மாதம் இருமுறைப்பத்திரிகை 2 ஆண்டுகளாகத்தொடர்ந்து வெளிவருகிறது. ஆண்டு சந்தா ரூ. 2-8-0. ஆறு மாதம் ரூ- 1-8-0 சந்தாதாரராகச் சேர்ந்துக் கொள்ளுங்கள்.

ஆசிரியா: இ மாணிக்கம்
தெப்பககுளம P. O. திருசசி.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press 2/45, Muthumari Chetty Street, Madras-1